செ.வெ.எண்-05 நாள்-05.04.2018

# பத்திரிக்கைச் செய்தி

## வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை திட்டம்

அரியலூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை பெறுவதற்கு பத்தாம் வகுப்பு கல்வித்தகுதி தேர்ச்சி பெறாத / தேர்ச்சி பெற்றவர்கள்,பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் / பட்டபடிப்பு தேர்ச்சி பெற்றவர்கள் தங்களது கல்வித்தகுதியை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து ஐந்து (5) ஆண்டுகள் முடிவடைந்து தொடர்ந்து புதுப்பித்து இருக்க வேண்டும்.

மாற்றுதிறனாளிகள் பத்தாம் வகுப்பு கல்வித்தகுதி தேர்ச்சி பெறாத / தேர்ச்சி பெற்றவர்கள் முதல் பட்டபடிப்பு தேர்ச்சி பெற்றவர்கள் வரை தங்களது கல்வித்தகுதியை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து ஒரு ஆண்டு முடிவடைந்து இருக்க வேண்டும்

31.03.2018 தேதியின்படி தாழ்த்தப்பட்ட / பழங்குடியினர் 45 வயதிற்குள்ளும், இதரப்பிரிவினர் 40 வயதிற்குள்ளும் இருக்க வேண்டும் விண்ணப்பதாரர் எந்தவொரு கல்விநிறுவனத்திலும் கல்விபயிலுபவராக இருத்தல் கூடாது. ஆனால் தொலைதூர கல்விபயிலுபவராக இருக்கலாம்.குடும்ப வருமானம் ரூ.50,000/-ற்கு மிகாமல் இருக்க வேண்டும். மாற்றுதிறனாளிகளுக்கு வருமான வரம்பு ஏதுமில்லை.

வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை திட்டத்திற்குரிய விண்ணபத்தினை அலுவலக வேலைநாட்களில் முற்பகலில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக அடையாள அட்டையுடன் நேரில் வந்து பெற்றுகொள்ளலாம்.

மேலும் பூர்த்தி செய்த விண்ணப்பங்களினை **31.05.2018-க்குள்** அனைத்து அசல் கல்விசான்றுகளுடன் மாவட்ட வேலைவாய்ப்பு அடையாள அட்டையுடனும், மாற்றுதிறனாளிகள் மேற்படி சான்றுகளுடன் மாற்றுதிறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டையுடன் நேரில் சமர்ப்பிக்குமாறு அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**